**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 279/2023**

**Deposition of P.W.** 7

Name : சௌந்தர்ராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மிடாலத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாரளாக பணியாற்றிய போது 05.07.2016ம் தேதி 11.30 மணிக்கு ஹரீஸ் என்பவர் கொடுத்த புகார் மனுவை நிலைய தலைமைக்காவலர் திரு. ஜேலார் என்பவர் பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண்.593/2016 பிரிவுகள் 307, 294(பி) இ.த.ச மற்றும் 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடைசெய்யும் சட்டபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார் அதனை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் அந்த பார்வை

மகஜர் அ.சா.ஆ.3. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பின்னர் சாட்சிகள் ஹரீஸ், ஷாஜி, மணி, அஜின், அகமது மீரான், பீட்டர் ஜெகன், பாலசுந்தர் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்த தலைமைக்காவலரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி 05.07.2016ம் தேதி 14.00 மணிக்கு முளகுமூடு பேரூந்து நிறுத்ததில் வைத்து கைது செய்து சாட்சிகள் அஜித், முகமது மீரான் ஆகியவர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரியிடமிருந்து பட்டாக்கத்தி ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.4, அத்தாட்சி அ.சா.ஆ.5. படிவம் 95 அ.சா.ஆ.6. பட்டாக்கத்தி சா.பொ.1. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி விட்டு வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.